**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 65/2024 – PW- 10**

| | |
|---|---|
| Name | திரு. வினோத் |
| Husband/Father Name | மூர்த்தி |
| Village /Area | சிறுவளையம் |
| Taluk | நெமிலி |
| Occupation | கூலி |
| Age | 40 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 17.10.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 2021ம் அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் நான் வேலைக்கு சென்று வீட்டிற்கு வந்து சாப்பிட்டு உறங்க சென்ற பிறகு போலீசார் வந்து என்னை அழைத்து கையொப்பம் கேட்டார்கள் எதற்காக என்று கேட்டதற்கு ஒரு குழந்தை இறந்து விட்டதாகவும் அவர்கள் வந்து சென்றதற்கு சாட்சியாக என்னை கையொப்பம் இடச் சொன்னார்கள் நானும் கையொப்பம் இட்டேன். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் சம்பவ தினத்தன்று இரவு 10.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள். சுமார் 5 – 6 போலீசார்கள் அங்கு வந்தார்கள். என் வீட்டிற்கு தண்ணீர் வேண்டும் என்று ஒரு மகளிர் போலீசார் வந்து கேட்டார்கள். போலீசார் சுமார் 2 மணிநேரம் சம்பவ இடத்தில் இருந்தார்கள் அவர்கள் இருக்கும் வரை நான் அவர்களுடனே இருந்தேனா என்றால் இல்லை. அவர்கள் செல்லும் போது என்னிடம் கையொப்பம் பெற்று சென்றார்கள் என்று சொன்னால் சரிதான்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.17 18:14:31 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.